2013 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பண்ருட்டி ஒன்றியத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்கின்ற பணிகள் நடைபெறுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இடம் தேர்வு செய்கின்ற பணிகள் நடைபெற்றாலே, அங்கே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுவிட்டது என்றுதான் பொருள். ஆகவே, அங்கே, துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகளை விரைவுபடுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

***7696—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சிக்கு ரூ.45.60 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான சுத்திகரிப்பு நிலையம் மற்றும்

கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கத் தேவையான இடங்களை இறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர வகுப்பினருக்கான அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றிநின்ற பகை முறித்து, சூழ்ச்சிகளை வேரறுத்து, போர்ப் படையின் வேகம் கொண்டு பொற்கால ஆட்சி தந்து, இன்று தமிழகமே பூரித்திடும் எங்கள் தாயே! வருங்கால பாரதமே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். எனது பூம்புகார் தொகுதியிலுள்ள, தரங்கம்பாடி பேரூராட்சியில் சுமார் 25 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். மக்கள் சுகாதாரமாக வாழ ஏதுவாகவும், நிலத்தடி நீர் மாசுபடாமல் இருக்கவும், பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை முதல் வினாவிலேயே நான் கூறினேன். 22,963 மக்கள் தொகை கொண்ட அந்தப் பேரூராட்சி 18 வார்டுகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. எனவே, இந்தத் திட்ட மதிப்பீடு முடிந்தபின் சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்துவதற்கான இடம் கிடைத்தவுடனேயே உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.

திரு. சு. பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணங்கும் கரம் விலகும் முன் வரம் தருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செய்து முடிக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்தில், 72–வது வட்டத்தில் நவரத்தினபுரம் மூன்றாவது தெரு, மாணிக்கம் நகர், மாரியம்மன் நகர், அம்மன் தெரு, ஸ்ரீராம் மெயின் ரோடு, மருதுபாண்டியர் நகர் ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே மாநகராட்சிப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டபோது ஏற்கெனவே சொன்னேன். கடந்த கால ஆட்சியில் சில தவறான அணுகுமுறையின் காரணமாக முழுமையாக மதுரை மாநகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுகின்ற வகையிலேதான், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 250 கோடி ரூபாயை ஒதுக்கி மதுரையின் அனைத்துப் பகுதிகளிலும் அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஒரு பகுதியில் இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மேலும், இப்போது புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் பாதாளச் சாக்கடைத்

திட்டம் ஏற்படுத்துவதற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*

முற்பகல் 10—10

திரு. வே. குணசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தின் முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, தூசி பேரூராட்சியில், பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து பேரூராட்சிகளுக்கும் விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. நிதி ஆதாரத்தை முன்நிறுத்தியும், அதோடுமட்டுமல்லாமல், சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்குரிய நிலத்தினைக் கையகப்படுத்தியும், முன்னுரிமையின் அடிப்படையில் ஒவ்வொரு பேரூராட்சியாக திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.*

திரு. கு. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது எழும்பூர் தொகுதியில், 104-வது வட்டம், குள்ளாபுரம் பகுதியில் சுமார் 2,500—க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. அந்தப் பகுதியில் புதியதாக பாதாளச் சாக்கடைத்*

2013 அக்டோபர் 29]

திட்டம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே முறையாக பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கப்பட்ட மாநகரத்தினுடைய மையப் பகுதி அந்தப் பகுதி. புதிய குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டிருப்பின், அந்தக் குடியிருப்புகளுக்கும் தேவையான பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்தித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி, என்னுடைய கள்ளக்குறிச்சி தொகுதிக்கு உட்பட்ட தியாகதுர்கம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்பு ஊராட்சிகளிலும் அதை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு) அது பேரூராட்சியாக இருந்தால் ஏற்கெனவே நான் கூறியதைப்போல விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. நிதி ஆதாரங்களைக்கொண்டு அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதிக்கு உட்பட்ட குலசேகரம் பேரூராட்சியில் மக்கள் தொகை அதிகமாக உள்ளது. வர்த்தக நிறுவனங்களும், மருத்துவக் கல்லூரிகளும், மேல்நிலைப் பள்ளிகளும் அதிக அளவில் இருக்கின்றன. சாக்கடை கலந்த கழிவுநீர்த் தேக்கத்தில் உருவாகும் கொசுக்களால், டெங்கு, மலேரியா போன்ற காய்ச்சல்களும், குடிநீரில் கழிவுநீர் கலந்து காலரா நோய் உருவாகி அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குலசேகரம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைக்கின்றபோதே குற்றச்சாட்டையும் வைக்கின்றார். அந்தக் குற்றச்சாட்டு என்ன என்பதை ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். டெங்கு காய்ச்சல் வந்துவிட்டது என்றெல்லாம் பொதுவாக சொல்லக் கூடாது. இப்போது எடுத்த கடுமையான நடவடிக்கையின் காரணமாக தமிழகம் முழுவதும் டெங்கு காய்ச்சல் முழுமையாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தயவு செய்து இதுபோன்ற குற்றச்சாட்டுகளை மீண்டும் மீண்டும் கூறாமல், உங்கள் கோரிக்கைகளை வையுங்கள். கோரிக்கையை நிறைவேற்றுவதற்காகத்தான் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, கடுமையாக உழைத்துக்கொண்டிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்கின்றபோது எந்தக் கட்சி என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நினைப்பதில்லை. எந்தப் பகுதியாக இருந்தாலும் அந்தப் பகுதிவாழ் மக்களுக்குத் தேவையானவற்றை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு*

2013 அக்டோபர் 29]

வருகிறார்கள். எனவே, ஏற்கெனவே அனைத்து பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக விரிவான ஒரு திட்டத்தைத் தயார்படுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்து, அதற்காக அந்தத் திட்டத்தை உருவாக்கி, தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வருவதற்காக 22,227 கோடி ரூபாய்க்கு விரிவான திட்டம் தயார் செய்யப்பட்டிருக்கின்றது. அந்தத் திட்டத்தின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பேரூராட்சிக்கும் இது உள்ளடக்கமாக இருக்கிறது. எனவே நிதி ஆதாரத்தை முன்நிறுத்தி அந்தப் பகுதிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

திருமதி எஸ். கணிதா சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி எனது மதுராந்தகம் தொகுதியில் இரண்டு பேரூராட்சிகளும் ஒரு நகராட்சியும் உள்ளன. இந்த இரண்டு பேரூராட்சிகளில் ஏதாவது ஒரு பேரூராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை இந்த ஆண்டு அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே என்னைப் பார்க்கும்பொழுதெல்லாம் கேட்டுக் கொண்டேயிருக்கிறார், மகிழ்ச்சி. உணர்வுபூர்வமாக மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் வேகமாக இருக்கிறார்,

மகிழ்ச்சி. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று விரைவாக அந்தப் பகுதியில் பணியைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 2001 ஆம் ஆண்டிலே மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சியிலிருந்தபோது ஆய்வு செய்யப்பட்டது. ஆனால், இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இந்த ஆண்டு அதற்கான நடவடிக்கைகளை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 22 நகராட்சிகளுக்குப் பணி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.

திரு. எம்.கே. செல்வராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அம்மா என்றால் அன்பு' என்ற தாரக மந்திரத்தை தரணிக்கு அளித்து, திக்கற்றவர்களுக்கும், ஏழைகளுக்கும் தாயாக விளங்கி, இறைப் பணியாற்றும் இதய தெய்வமே! அம்மா, தங்கள் ஆட்சியில்தான் தொட்டில் குழந்தைத் திட்டம், குடிமகன் மட்டும் போதாது, குடிமகள் என்ற நிலையை உருவாக்கி பெண்கள்

2013 அக்டோபர் 29]

பாதுகாப்புத் திட்டங்கள் பல, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டங்கள் பல ஏற்படுத்தப்பட்டன. அனைத்துத் திட்டங்களிலும் பெண்களுக்கு முன்னுரிமை. அனைத்துக்கும் மேலாய் அம்மா திட்டம், அம்மா உணவகம் போன்றவற்றைத் தந்து தமிழக மக்களின் தாயாக விளங்குகின்ற வருங்கால பாரதப் பிரதமர் மாண்புமிகு அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் ஒருமித்த கருத்துக்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளித்து இலங்கையில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டினை இந்தியா முற்றிலுமாகப் புறக்கணிக்க வேண்டும், பெயருக்குக்கூட இந்தியப் பிரதிநிதிகள் யாரும் பங்கேற்கக் கூடாது என்று வரலாற்று சிறப்புமிக்கத் தீர்மானத்தை முன்மொழிந்து, சட்டப் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சேலம் மாநகராட்சிப் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நடந்து கொண்டு வரும் வேளையில், பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளுக்காக தார்ச் சாலைகள் வெட்டப்பட்டு, ஒருசில பகுதிகளில் வெட்டப்பட்ட தார்ச் சாலைகள் போடப்படாமல் உள்ளன. அதனை சீர்செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பகுதிகளில், மாநகரப் பகுதிகளில், பேரூராட்சிப் பகுதிகளில் ஏற்கெனவே கடந்த கால ஆட்சியில் இதுபோன்ற பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் அமல்படுத்தப்பட்டபோது தொடர்ந்து அந்தப் பகுதிகளுக்கு முழுமையாகச் சாலைகளை சீர்செய்து, தார்ச் சாலைகளைப் போடுவதற்குரிய நிதியை ஒதுக்கவில்லை. அவ்வாறு இல்லாமல், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது இதுபோன்ற பாதாளச் சாக்கடைத் திட்டத்தை

உருவாக்குகின்றபோது, உடைக்கப்படுகின்ற சாலைகளை மீண்டும் மூடி, தார்ச் சாலைகளை அமைப்பதற்குரிய நிதியையும் இணைத்து வழங்கியிருக்கிறார்கள். எனவே, அந்தச் சாலைகள் உடனடியாக சீர் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டவுன் பஞ்சாயத்துக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடர்ந்து வரும் என்று கூறினார்கள். என்னுடைய மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியானது 5 பேரூராட்சிகளை உள்ளடக்கிய பகுதியாகும். நகரப் பகுதி இல்லாதது. புதிதாக உருவாக்கப்பட்ட தொகுதி. மாண்புமிகு அம்மா அவர்களால் புதிதாக உருவாக்கப்பட்ட வட்டம். ஆகவே, சிறப்புக் கவனம் எடுத்து, முன்னுரிமை அடிப்படையிலே மடத்துக்குளம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று அன்போடு வேண்டி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் அன்பு வேண்டுகோளை விடுத்திருக்கிறார். அந்த அன்பு வேண்டுகோளை உடனடியாக நிறைவேற்றுவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டையிலே உட்கார்ந்து தீட்டுகிற திட்டங்களால்

2013 அக்டோபர் 29]

குக்கிராமங்களில் கூலி வேலை செய்கின்றவர்களின் வாழ்க்கை உயர வேண்டுமென்ற அடிப்படையில் தினந்தோறும் பொற்கால ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருமங்கலம் நகராட்சி, டி. கல்லுப்பட்டி பேரூராட்சி, பேரையூர் பேரூராட்சி ஏதாவது ஒரு பகுதிக்கு இந்த ஆண்டு பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, ஏற்கெனவே இதற்கான விரிவான திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. பல ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்குரிய இடங்கள் கிடைப்பதில்லை. அது அரசு நிலமாக இருந்தாலும்கூட, அந்த நிலத்தை நாம் கையகப்படுத்தும்பொழுது, அந்த நிலத்தின் அருகில் குடியிருப்பவர்கள் போராட்டத்திலே இறங்கிவிடுகிறார்கள். கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அந்த இடத்தில் வரக்கூடாது என்று தடையாணைகளை வாங்கிவிடுகிறார்கள். இதையெல்லாம் ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியோடு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*